**பருத்தித்துறை பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்ரெம்பர் 19 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பருத்தித்துறை பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) சபையின் பாவனையிலுள்ள 14 மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 9,143,000 ஆல் மதிப்பிடப்பட்டு கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அதன் உரிமை மாற்றப்பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபையின் பாவனையிலுள்ள 07 உரிமை மாற்றப்படாத வாகனங்கள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) சபையின் பெயரிற்கு உரிமை மாற்றப்பட்டு பெறுமதி மதிப்பிடப்பட்ட நிலையில் 05 வாகனங்கள் கணக்கிற்கு கொண்டுவரப்படாததமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 995,000 ஆல் கணக்குகளில் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(ஈ) 06 காணிகட்டடங்களின் பெறுமதி கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்காமையினால் காணிகட்டடங்களின் பெறுமதி ரூபா 2,126,064 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

04 வகையான முற்பணங்கள் ரூபா 34,875 குறிப்பிட்ட ஆண்டில் தீர்வு செய்யவேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் இற்றைவரை தீர்வு செய்யப் பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

குறிப்பிட்ட நபர்களுக்கோ நிறுவனங்களுக்கோ கொடுக்கப்பட வேண்டிய 72 வகையான கொடுப்பனவுகள் ரூபா 2,714,090 இற்றை வரை கொடுக்கப்படாது வைப்புக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

**1.3.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

சபையினால் வாகனப் பதிவேடு, இழப்புக்கள் சேதங்கள் பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான சான்றின்மை காரணமாக ரூபா 13,866 பெறுமதியான ஒரு கொடுக்கல் வாங்கலினை கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப் பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் (நிதி நிர்வாக) விதிகள் அத்தியாயம் I விதி 5 (xii) | காசு, களஞ்சியம் என்பவற்றிக்கு பொறுப்பாகவுள்ள அலுவலரிடம் பிணைப்பணம் பெற்றுக் கொண்டமை உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் நிதிப்பிரமாணம் 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட பிடிபணங்கள் ரூபா 2,719,033 நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் மீதியாக நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (இ) 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய இலக்கம் 41/90 கொண்ட பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபம் | சபையின் வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2016 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டெழும் செலவிலும்கூடிய வருமானமாக ரூபா 30,645,168 ஆக இருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவிலும்கூடிய வருமானமாக ரூபா 21,255,711 ஆகவும் இருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 9,389,457 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறியமிகையாக ரூபா 261,246 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறியமிகையாக ரூபா 5,401,962 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 5,140,716 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 146,051,137 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 128,395,174 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 17,655,963 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.4 வருமான நிர்வாகம்

#### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2016<br>மதிப்பிடப்பட்டது | 2016<br>உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 60 | 79 | 919 |
| குத்தகை வாடகைகள் | 6,040 | 4,413 | 117 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,170 | 1,264 | - |
| வேறு வருமானங்கள் | 65,930 | 62,915 | - |
| **மொத்தம்** | **73,200** | **68,671** | **1,036** |

#### 2.4.2 குத்தகை

குத்தகை நிலுவை ரூபா 117,000 குறிப்பிட்ட ஆண்டில் அறவிடவேண்டியுள்ளது.

**2.4.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

சபையின் எல்லைக்குட்பட்ட 02 பிரதேசங்களில் 02 தொலைத்தொடர்பு கோபுரங்களின் அனுமதிப்பத்திரக் கட்டணங்களும் நிர்மாணித்தல் கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.4 ஏனைய வருமானங்கள்**

சபையின் எல்லைக்குட்பட்ட 34 மயானங்களிற்கு மயானவரி சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.5 முத்திரைக்கட்டணங்கள்**

2015ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை பெறப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 5,369,625 அறவிடப் பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையில் 81 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் **73** பதவியினர் கடமையாற்றுகின்றனர். அதன் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட ஆளணியைவிட 12 அலுவலர்கள் பற்றாக்குறையாகவும் 04 அலுவலர்கள் மேலதிகமாகவும் உள்ளனர்.

(ஆ) சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு ஒவ்வோராண்டும் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடாத்தப்பட வேண்டும். எனினும் குறித்த சபையினால் மீளாய்வாண்டில் 01 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டமே நடாத்தப்பட்டுள்ளது.

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

2007 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் உள்ளூராட்சி ஆணையாளரினால் சனசமூக நிலையங்களுக்காக வழங்கப்பட்ட நன்கொடைகள் ரூபா 145,113 உரிய சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையில் உள்ள 02 சந்தைகள் பயன்படுத்தப்படாதுள்ளது.

(ஆ) ரூபா 2,805,443 செலவில் கடற்கரையில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த நோக்கத்துக்காக பயன்படுத்தப்படாமலுள்ளது.

**3.4 செயற்திட்டத் தாமதங்கள்**

**நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்**

மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 11 வேலைத்திட்டங்கள் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.5 வருமான இழப்பு**

சபைக்குட்பட்ட 03 சந்தைக் கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

கழிவுப்பொருள் சேரிக்கப்பட்டு தரம் பிரிக்காது ஒன்றாக குவிக்கப்படுகின்றது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**செலவினக் கட்டமைப்பு**

பாதீட்டுச் செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 5,000 தொடக்கம் ரூபா 16,097,100 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

**4.2 சொத்து முகாமைத்துவம்**

**பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

12 வாகனங்கள் பழுதடைந்து பயன்பாடின்றி காணப்படுகின்றது.

**4.3 வருடாந்த பொருட் கணக்கெடுப்பு - 2016**

தலைமை அலுவலகத்தில் பயன்படுத்தப்படாதுள்ள அண்ணளவாக 1000 லீற்றர் தார் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.